*வணக்கம், இந்தத்தொடரானது ஏற்கனவே எழுதப்பட்டபோதிலும் இதனை வெளியிடுவதற்கு பல்வேறு காரணங்கள் தடைக்கற்களாக அமைந்தது. இருந்தும் பலருடைய ஏவதலும், தூண்டலும் என்னை பகுதிபகுதியாக வெளியிடத் தள்ளியது. இது உங்கள் கருத்தினையும் மக்கள் கருத்தினையும் எதிர்பார்க்கிறது. இதில் எழுத்துப்பிழைகள் அமைய வாய்ப்புண்டு, வரும் வெளியீடுகள் அவற்றை நிவர்த்தி செய்யும்.இத்தொடரானது "அடிதடி" என்ற பாகங்களாகத் தொகுக்கப்படுகிறது. இதில் தமிழர் விடிவின் பாதைகளுக்கான படிக்கற்களும் கடந்து சென்ற துவடுகளின் அடிக்கற்களும், பல்வேறு வினாக்களும் விடைகளுமாக... தோற்றுவிக்கப் படவிருக்கிறது. இவற்றை விசேட விதமாக வெளியிடும் படி வெளியீட்டாளர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். நன்றி அன்பன் அருகன்.*

## என் பக்கபங்கள்

### பொங்கு மலை எங்கிருந்து பொருமி வந்தாலும்
### அங்கெல்லா மெங்கள் தமிழ் மணங் கமழுமையா!

கடந்த கால நடைமுறைகள் எமக்குக் கற்றுத்தந்த பாடம் இலங்கையின் பிரச்சனை தீர்வுக்கற்ற கனவுகள் என்று எண்ணத்தோன்றுகிறது.

இலங்கையில் தமிழ் மக்களின் உயிர்ச் சேதத்தையோ வாழ்க்கைச் சிதைவினையோ யாரும் எண்ணிப்பார்த்தாதாக இல்லை.

அவரவர் தமது தேவைகளையும் இலாபத்தையும் காத்துக்கொள்வதோடு தமக்கு முக்காடும் போட்டக்கொள்கின்றனர்.

இலங்கை அன்னையின் இரத்தக்கறையும் வேர்வைத்துளியும் துடைக்கப்படவேண்டுமென்றால் ஒரேயொரு கட்டமைப்புக்குள் வந்தாலொழிய தீர்க்கப்படப்போவதில்லை.

அது, "ஓர் அரசின் கீழ் இரு தனி அதிகாரங்கள்"

அதாவது,

இலங்கை எப்போதும் தனது குடைக்கள்ளே இருந்து கொள்ள இருதனி தனி அதிகாரங்கள் சிங்களத்துக்கென வொன்றும் தனியதிகாரங்கள் தமிழுக்கென்றும் பகுக்கப்பட்டு இருபாலரிடமும் இருந்து தெரிவுசெயயப்பட்ட அங்கத்தவரால் ஒரு குடையில் இலங்கை ஆட்சிசெய்யப்பட்டாலெயொழிய நிம்மதிப்பெருமூச்சு யாரும் விடமுடியாது என்பது உறுதி.

இலங்கையில் ஆட்சிசெய்யும் கட்சியின் கொடியை அரசின் கொடியாக மாற்றுவது போல் சட்டங்களை உருவாக்குவோமேயானால், நாட்டின் கொடியானது நாமுக்கு நாள் காலத்துக்குக் காலம் மாற்றப்பட்டுக்கொண்டேயிருக்கும். அது போல தமிழீழவிடுதலைப்புலிகளின் கொடியினை தமிழீழத் தேசியக் கொடி என்று உறுதிப்படுத்துவது பொருத்தமற்றது என்று எண்ணத் தோன்றுகிறது. தமிழீழத்திற்கென்று ஒரு கொடி அமைக்கப்படவேண்டும் தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு அரசியல் கட்சி, அவர்களால் அரசாங்கம் அமையுமாயின் அது **<u>சுதந்திர தமிழீழ ஜனநாயக சோசலிச குடியரசின்</u>** பிரதான பலம் பொருந்திய கட்சியாகக் காணப்படவேண்டும்

உலகம் மன்னராட்சியில் இருந்து மக்களாட்சிக்கு மாற்றப்படும் போது, இங்குமட்டும் மாறாகவா இடம்பெறும்.

இன்று நடந்து கொண்டிருக்கும் போர் விடுதலைக்காகவோ தன்மானத்திற்காகவோ நடைபெறுவது போல் இல்லாமல் வியாபாரத்திறகபாக நடப்பது போல் காணப்படுகிறது. இவ்வாறான விமர்சனங்களக்குக் கொடுக்கப்படும் பட்டம் தேசத்துரோகி அல்லது ...!!!

௨00௩ல் வெளியிடப்பட்ட ‘‘அநுபூதி’ என்னும் நூலில் குறிப்பிடும் ‘‘சாகடிக்கப்படும் சரித்திரம்’’ என்ற பகுதியில் தமிழரின் வரலாறு பற்றிச் சற்றுச் சித்தரித்துக்காட்டப்பட்டுள்ளது.

௨௦௦6ல் நின்று பார்க்கும் போது, இலங்கை அரசியல் வாதிகள் அரசியல் அறிவில் அநுபவம் மிக்கவர்களாகத் திகழ்கின்றனர் என்பது ஐயமில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகளோ தாம்தான் அரசியலை நன்றாய்க் கற்றவர்கள் என்று மார்தட்டிக் கொள்கின்றனர்.

இதில் வேடிக்கை என்னவென்றால் **தமிழீழ விடுதலைப்புலிகளின் பலத்தை அதிகரித்ததும், உலகிற்கு வெளிக்காட்டியதும் சிங்கள இனவாதிகள் என்பது எவ்வளவுக்கு எவ்வளவு உண்மையோ அவ்வளவுக்கவ்வளவு உண்மை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அரசியலைக் கற்றுக்கொடுத்த மேதாவிகளும் அவர்களென்பது.**

இப்பக்கங்கள் எதிர்காலத்திற்கு
மிகவும் கைகொடுக்கும் என்று
கருதுகின்றேன்.
நன்றி
ஆண்டு ௨௦௦6
இத்தாலி.

இப்போது உங்களை ஆக்கத்திற்குள் இழுத்துச் செல்ல விரும்புகிறேன்.

# உதயமாகு(மா) தமிழீழம்?

**சுதந்திர தமிழீழ ஜனநாயக சோசலீச குடியரசு**

**அருகன்**

**"அடிதடி 1"**

**"அன்றாட அனுபவரீதியில் எரியும் தணலினால்ப் புறப்படுகின்ற புகையில் இருந்து எழுதப்படும் பக்கங்கள் இது."**

உலகத்தின் எந்தப்பாகந்தான் மோட்சபூமியாகிக்கிடக்கிறது?
எல்லாம் சிதைந்தும் சீர்குலைந்தும் சின்னாபின்னமாகிக்கிடக்கிறது.

மனிதனுக்கு சுதந்திரம், சுபீட்ஷம் தேவையென்று யார் சொன்னார்? ஒவ்வொருவருக்கும் தமது வேலையினைப் பார்க்கவே நேரம் போதாமையாகிக்கிடக்கிறது. இங்கு வேலையற்றவரின் வீண்செயலே விபரீதத்தில் போய் முடிகிறது. நல்ல சத்துணவு, நிம்மதியான தூக்கம் குடும்பத்துடனான பாசம் இவற்றை ஈடுசெய்வதற்காக 365 நாட்களும் உழைப்பு, இத்தனையிலுமே மனிதனின் ஆயட்காலம் முடிந்து விடுகிறது.

மனிதனின் ஆயுட்காலம் வரையறுக்கப்பட்டுள்ள அளவு தற்போது 75 அல்லது 80என்று வைத்துக்கொள்ளுவோம், அதனையும்தாண்டி அவனால் வாழமுடியாது. அப்படியே அவன் வாழவேண்டுமென்றாலும் இன்னொருவருடைய துணையிலோ அல்லது ஒருவருக்கு மேற்பட்டவரின் ஆதரவிலோதான் வாழமுடியும். ஆனால், ஓய்வூதியம் பெறும் காலம் 60 அல்லது 65 என்று காணப்படுகிறது; எனவே, அண்ணளவாக வயோதிபக்காலத்தின் தேவையற்ற 10வருடத்திற்காக வாலிபக்காலத்தின் அற்புதமான 40வருடத்தை உழைப்பிலே செலவழிக்க(பாழாக்க) அரசுகளின் சட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

''வாழ்வதற்காக உழைக்க வேண்டும் என்ற காலத்திற்குப் பதிலாக,
உழைப்பதற்காய் வாழவேண்டும் என்றாகிவிட்டது''

திங்கள் காலையில் எழுந்ததும் சனி மாலைவரை உழைப்பு, உழைப்பு, உழைப்பு; ஆனால், உழைப்புக்கேற்ற ஊதியத்தை சாதாரண உழைப்பாளி பெறமுடிவதில்லை. தனது உழைப்பின் பயனை அனுபவிக்காமலே அவனுடைய வாழ்க்கை முடிந்து விடுகிறது. அதன் பலனை அவன் சந்ததியும் பெறுவதில்லை இதற்கு முதலாழிவர்க்கத்தினர் விதிவிலக்காகிவிடுகின்றனர்.

பிச்சை எடுப்பவன், கொள்ளையடிப்பவன், ஏமாற்று வேலை செய்பவனுக்கு அரசுகள் ஆதரவளித்தும் சலுகைகளைக் கொடுத்தும்வருகிறது; இவர்கள் வருடம் முழுக்க உழைப்பதில்லை ஆனால், உணவு கிடைக்கிறது, எதிர்காலத்தைப்பற்றிச் சிந்திப்பதில்லை ஆனால், வாழ்க்கை நடக்கிறது.

ஒருநாள் விடிவதனை ஒழுங்காக இரசிக்கமுடிவதில்லை, மனிதன் உலகத்தில் உழைப்பதற்காகத்தான் பிறக்கிறான் என்றாகிவிட்டது. இயந்திரமயமான செயற்பாடுகள், குடும்பத்தோடு வாழும்காலத்திலும் பார்க்க தொழிலோடு வாழும் காலந்தான் அதிகமாக இருக்கிறது.

இதற்கு வழிதான் என்ன?

இருக்கிறது.

“அனைவருக்கும் உழைப்பு அனைவருக்கும் ஓய்வு”. அதாவது, ஒருநாட்டில் உதாரணத்திற்கு இத்தாலி நாட்டை எடுத்துக்கொள்ளுங்கள்; வங்கிகள், அஞ்சல் அலுவலகங்கள், பொலீஸ் அலுவலகங்கள், மற்றும் அரச அலுவலகங்கள், மேலும், இராணுவத்தினர் உட்பட அனைத்துக்காவல் அமைப்புக்கள் இவர்களுடைய வேலை நேரங்கள், மற்றும் வேலையின் உண்மைத்தன்மை என்பவற்றை எடுத்துப்பார்த்தால் தெளிவாய்ப்புரியும்.

அனைத்துக்காவல் அதிகாரிகளையும் (இராணுவம், பொலீஸ், நேவி,...) எடுத்துப்பார்த்தால் அவர்களுடைய வேலைதவிரமற்றைய நேரத்தில் என்ன செய்கிறார்கள்?

ஆவர்களுக்கு வேலை என்று வந்தால் அது உயிருக்கு உலைவைக்கும் வேலைதான், உள்நாட்டைக்காக்கும் வேலைதான், சீர்குலையும் நாட்டை ச்சீர்ப்படுத்தும் வேலைதான், திடீரென தூக்கத்தைக்குலைத்து தொழிலுக்குப் போக வேண்டிய வேலைதான் ஒத்துக்கொள்கிறேன்... இவற்றிற்கு மாறாக சாதாரண உளைப்பாளியின் நிலை...?

இவற்றிற்கு விடைகாண்பதற்குள் வாருங்கள் வாருங்கள் உள்ளே!...

2003ல் வெளியிடப்பட்ட “அநுபூதி” என்னும் நூலில் குறிப்பிடும் “சாகடிக்கப்படும் சரித்திரம்” என்ற பகுதியில் தமிழரின் வரலாறு பற்றிச் சற்றுச் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளது.

2006ல் நின்று பார்க்கும் போது, இலங்கை அரசியல் வாதிகள் அரசியல் அறிவில் அநுபவம் மிக்கவர்களாகத் திகழ்கின்றனர் என்பது ஐயமில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகளோ தாம்தான் அரசியலை நன்றாய்க் கற்றவர்கள் என்று மார்தட்டிக் கொள்கின்றனர்.

இதில் வேடிக்கை என்னவென்றால் தமிழீழ விடுதலைப்புலிகளின் பலத்தை அதிகரித்ததும், உலகிற்கு வெளிக்காட்டியதும் சிங்கள இனவாதிகள் என்பது எவ்வளவுக்கு எவ்வளவு உண்மையோ அவ்வளவுக்கவ்வளவு உண்மை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அரசியலைக் கற்றுக்கொடுத்த மேதாலிகளும் அவர்கள் என்பது.

ஒருமுறை எழுதப்பட்ட வரிகளை இங்கு குறிப்பிட விரும்புறிறேன்.

**செய்நன்றி கொண்ட மகற்கு**

தமிழ் ஈழம் மலரும் அப்போது சிங்கள இராணுவத்தினரை
நீங்காமல் நினைவு கூருவேன் ! ஏன் தெரியுமா ?—
அவர்களின் தீராத கோரங் களும்

போராடும் தூண்டலுமே – எமை
நாடாள வைத்த தவம்

போராடி வெல்லும்படி . சிறு
நாடி நரம்பெல்லாம் வேரோடி நின்ற வேங்கையில் ,– வீர
வேட்டைக்காய் யாழ்க் கோட்டைக்காய்
இந்தத் தூண்டலின் வேகம் – கடல்
தாண்டி நாம் சென்ற கதி ளென்று காரணஞ்சொல்லி – உடல்
தஞ்சமடையக் காரணமின்று

தஞ்சமடைந்த நாமங்கு தாய் மொழியை மறந்தோமா –– நிதம்
நல்ல பல வீணை செய்து நாமிசைத்தே வந்தோம் நலமாக
வாண் வெளியில் விரைந்து செல்லும் வானொலிகள் வீட்டு வாசலில் ! – இரு
கைதட்டி மெட்டுப் போடும் இசைத்தட்டுக்கள் காதோரமாக

கணக்குகளையும் வழக்குகளையும் கம்பியூட்டரில் பார்த்தோம் – எம்
தாய்மொழியாம் தமிழ் மொழிக்கென தனித்தள மொன்று கணனியில மைத்தோம்

எழுதியறியும் வகை யெழுத்துக்களில் இரண்டா மிடம் இணையத்தில்
இணையற்ற தமிழுக்கின்று நன்றாய்க் கிடைத்ததென்று – தமி
ழீழம் மலரும் – அப்போது
சிங்கள இராணுவத்தினரை நீங்காமல் நினைவு கூருவேன்..!
ஏன் தெரியுமா ?– அவர்களின் தீராத கோரங் களும்
போராடும் தூண்டலுமே – எமை
நாடாள வைத் த தவம்

ஈழத்து ரிசிகளும் மகான்களும் மேதைகளும் மரணத்தால் – எங்கள்
மேனிகளில் மேன்மையுடன் வீற்றிருப்பார்!
அவர்கள் சென்நீர் விட்டுச் சென்றதால் மலரும் மீழத்தில் கண்ணீர்விட்டு – அவர்
காலடியில் பணிகின்றோம் குட்டி தேவர்கள் அவர்கள்

அப்போது அவர்கள் மேனிகளில் நஞ்சு மாலை சுமந்ததால்
இப்போது அவர்கள் மேனிகளில் – தும்பை
மாலை சூட்டுகிறோம் சிங்களர்க்கு அந்நாள் வெட்க மாலை
சூட்டியதால் எங்களுக்கு இந்நாள் மேனிகளில் தங்க மாலை சூட்டினீர்

புலி வீரர் விதையாக சிங்களப் படைவீரர் உரமாக
வளர்ந்து நின்ற மரமாக மலரும் மெங்கள் ஈழம் – அப்போது
சிங்கள இராணுவத்தினரை நீங்காமல் நினைவு கூருவேன் !
ஏன் தெரியுமா? –அவர்களின் தீராத கோரங் களும்
போராடும் தூண்டலுமே – எமை
நாடாள வைத் ததவம்

இது பலவருடங்களுக்கு முன்னரே எழுதப்பட்டது ( வெளியீடு –அநுபூதி 2003)

இன்று வரையுள்ள இலங்கைச் சூழலில் நின்று பார்க்கும் போது இரு மாறுபட்ட பார்வை தோன்றுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் செயற்பாடு மிகப் பலம் பொருந்தியதாகக் காணப்படுவதால், ஈழத்தில் அவர்களது செயற்பாடானது அங்கிகரிக்கப்படாத ஒரு தனிநாடு என்று சொல்லிக்கொள்ளலாம்.

இருந்தாலும், நாணயக் கொடுக்கல் வாங்கல் மற்றும் ஆவணங்கள் போன்றவற்றிலுஞ்சரி இலங்கையின் அத்திவாரத்தில் இருந்து அகலவில்லை. மேலும், கடவுச்சீட்டுமற்றும் தேசிய இனம் என்ற ரீதியிலும் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இக்கட்டுப்பாட்டுக்குள்ளும் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ்வதாய்ச் சொல்லமுடியாது.

மறுபுறம், சிங்கள இனவாத அரசியலின் பக்கம் பார்த்தால், புறக்கணிக்கப்பட்ட ஒரு தேசிய இனத்தைப் பாதுகாப்பது போல் தமிழரைப் பார்த்து வருகிறது. அதாவது, அலுவலகங்களில்

இன்றும் (01 – 01 – 2007) தமிழ் சிங்களம் அரச கரும மொழியாக மைந்த போதிலும் வெறும் பேச்சு வழக்கில் மட்டுமே சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது இதனை "அர்ச்சனை இதழ்கள்" (வெளியீடு 2007 இத்தாலியில்) என்னும் நூலின் ஒரு பகுதி தெளிவு படுத்துகிறது. இங்கு இத்தாலியில் உள்ள இலங்கை எம்பசி மேற்கொள்ளும் சேவைகள் தமிழ் மக்களுக்குச் சென்றடையும் கேவலங்கள் காட்டப்பட்டும், இன்னும் திருத்தப்படாமலே இருக்கிறது என்பது குறிப்பிடத் தக்கது. இலங்கை அரச அலுவலகங்களில் தமிழ் மொழி தாறு மாறாக எழுதப்பட்டும், பல அலுவலகங்களில் முற்றாக மறுக்கப்பட்டுக் காணப்படும் கேவலமான நிலமை மட்டுமல்லாது, அதிகாரிகள் முற்றும் முழுதாக சிங்களவர்களாகவே காணப்படுவதும், தமிழ் தெரிந்த சிங்களவர் கூட தமிழில் தகவலைத்தராமை போன்ற அவலங்கள் அதிகரித்தமைகாரணமாக இலங்கையின்
குடைக்குள் தமிழர் சுதந்திரமாக வாழமுடியாமையும் காணப்படுகிறது.

இதில் ஒருமுக்கிய விடையம், பல அலுவலகங்களில் இடம்பெறுவது என்னவென்றால்: ஒரு ஆவணம் தமிழில் இருந்தால், அதனை ஆங்கிலத்திலோ இல்லது சிங்களத்திலோ மொழி பெயர்த்துத்தரும்படி வற்புறுத்துவதும், மாறாக சிங்களத்தில் இருந்தால் எந்த வித ஆட்சேபனையும் இன்றி அவற்றை ஏற்றுக் கொள்வதும் முற்றாகத்தவிர்க்கப்பட்டு, தீர்வானது இப்படி அமைய வேணடும்; ஆவணங்கள் தத்தனி மொழியில் பிரிக்கப்படாமல் இரு மொழிகளிலும் அல்லது மும்மொழிகளிலும் பூரணப்படுத்தப்படல் சட்டமாக்கப்பட வேண்டும். இதுவே நல்லதொரு தீர்வு.

மாறாக சிந்தித்துப்பார்த்தால், தமிழில் எழுதப்பட்ட திருமணப்பத்திரத்தை வெளிநாட்டுத்தேவை கருதி நடவடிக்கையினை உடுக்கும் போது, அதுமொழிபெயர்க்கப்பட்டு அலுவல்கள் பூர்த்தியாகும்போது, அது பலதாழ்களுடைய பத்திரமாகப் பரிநாமிக்கிறது. எனவே இவ்வாறான பரிநாமத்தைக் குறைத்து அத்தாழிலேயே முத்திரைகள் பதிக்கக்கூடியதாக அமைந்தால் மிகப்பாராட்டக் கூடியதொன்றாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில், நாம் ஒன்றை உணர வேண்டும்; தமிழர்களுக்கும் சிங்கள அரசிற்குந்தான் வாக்குவாதமேயொழிய, சிங்களவருக்கும் தமிழர்களுக்குமல்ல தகராறு!

தமிழர்களின் உரிமைகள் பலதும் மறுக்கப்பட்டு வருகின்றமையால், அதனை எதிர்த்து வினாக்கள் தொடுக்கப்பட்டதன் காரணமே இன்றுள்ள இலங்கையின் நிலையேயொழிய, <u>பயங்கரவாதம் என்ற சொல்லுக்கு இடமேயில்லை. வேண்டுமென்றால், தீவிரவாதம் எனசொல்லிக் கொள்ளலாம்.</u> ஏனென்றால், இரண்டு சொற்களுக்கும் பலத்த வேறுபாடு உண்டு. தீவிர வாதத்தையும் பயங்கரவாதத்தையும் ஒன்றாகக் கருதும் காரணத்தால், உரிமைப் போராட்டம் கூட மழுங்கடிக்கப்பட்டு விடுகிறது.

தீவிரவாதச் செயலை யார்தான் செய்யவில்லை!!!
அரசுகள் தீவிர வாதங்களைச் செய்யும் போது அதற்குக் கொடுக்கப்படும் பெயரும் தகுதியும் வேறாகிவிடுகிறது. அதுவே ஒரு அமைப்பால் அல்லது குழுக்களால் செய்யப்படும் போது அதனைப் பயங்கரவாதம் என்று முடி சூட்டி விடுகிறது.

இலங்கையில் நடந்து கொண்டிருப்பது பயங்கரவாதமல்ல தீவிர வாதம்! தீவிரமான வினாக்களால்த் தொகுக்கப் பட்ட மக்கள் போராட்டம், நசுக்கப்படும் இனத்துக்கெதிரான உரிமைப் போராட்டம்.

இலங்கை அரசு, போராட்டத்தை ஒடுக்குவதாகக் கூறிக் கொண்டு நடத்தும் தாக்குதல், போராட்டக் குழுக்களை அழித்ததோ இல்லையோ தமிழ் மக்களை அழிக்கத் தவறவில்லை. இச் செயல் தீவிர வாதமா, பயங்கரவாதமா அல்லது பயங்கரவாத ஒழிப்பா?

மீண்டும் அருகனின் "அடிதடி௨"ல் தொடரும் வரை…

## <u>"அடிதடி 2"</u>

தமிழர்களுக்கு ஆதரவு என்று சொல்லிக் கொள்ளும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பக்கம் பார்த்தால், அவர்கள் இன்று வரை சிங்கள மக்களை எதிர்க்கவேயில்லை என்பது மதிக்கப்படக்கூடிய விடையம். தமிழர்களை கொழும்பில் இருந்து கடந்த காலத்தில் பலாத்காரமாகத் திருப்பியமை கண்டிக்கப்படவேண்டிய செயல்; இருந்தும், தமிழீழ விடுதலைப்புலிகளின் பலமும் பலவீனமும் தமிழர்கள் தான் என்பதனை அறிந்த அரசியல் வாதிகளின்

திட்டம் சரியானதே. இவ்வாறு நோக்கும் போது தமிழர்களும் தமிழீழ விடுதலைப்புலிகளும் ஒன்று என்ற நிலமைக்கு வருகிறது. இப்போராட்டமானது ஒரு குழுப் போராட்டமல்ல, இது மக்கள் போராட்டம். எனவே, இதனை முடிவுக்குக் கொண்டு வரவேண்டியது அரசின் கடப்பாடாகும்.

ஏராளமான போராட்ட அமைப்புக்கள் மத்தியில், கடைசிவரை தமிழர்களுக்காக் குரல் கொடுப்பதில் பலம் பொருந்தி இருப்பது, தமிழீழ விடுதலைப்புலிகள் என்ற வகையில், அவர்கள் பாராட்டப்படவேண்டியவர்களே.

தமிழீழ விடுதலைப்புலிகளை ஓரங்கட்ட வேண்டும் என்றோ அல்லது ஒழிக்க வேண்டும் என்றோ பேரினவாதச் சிங்கள அரசாங்க அதிகாரிகள் கருதுவார்களேயானால், அவர்கள் போராட்டத்திலும் பார்க்க, தமிழர்களுக்கு முழு உரிமை வழங்குவதன் மூலமே முடிவு கட்ட முடியும். அதாவது, சட்டத்தில் குறிப்பிடுவது போல், சட்டத்தின் பார்வையில் ஒவ்வொரு குடிமகனும் சமமேயென்று அமைந்தால், தமிழீழ விடுதலைப்புலிகள் எதற்கு?? அவர்களின் போராட்டந்தான் எதற்கு???

கடந்த காலங்களில் இத்தாலியில் உள்ள (Reggio Emilia, Parma, Modena…) பகுதிகளின் பிரதிநிதிகளாக இலங்கைத் தூதராலயத்திற்குச் சென்று, மக்களின் சார்பில் அவர்களின் தேவையினைப் பூர்த்தி செய்து வருகிறோம். அவ்வேளைகளில், இத்தாலியில் "றோம்" நகரில் உள்ள இலங்கை "எம்பசி"க் காரியாலய அதிகாரிகள் படுத்தும் பாடு கொஞ்ச நஞ்சமல்ல… இதற்கிடையில், இதற்கான ஒப்பந்தத் தீர்வு ஜோசனையைக்கூட ஒரு அமைப்பின் மூலம் இரண்டு வருடத்திற்கு முன் இத்தாலி அரசு சார்பு, அரசு சார்பற்ற அமைப்புக்களுடைய அனுசரணையுடன் மேற் கொண்டும், இன்று வரை அதற்கான எந்தத் தீர்வும் வந்து சேரவில்லை. அந்த ஒப்பந்தம் எங்கு போடப்பட்டுள்ளதோ தெரியவில்லை; காரணம், அங்குள்ள ஆவணங்கள் கிடக்கும் நிலையைப் பார்த்ததும் இப்படி எண்ணத் தோன்றுகிறது. அவற்றை பின்னுள்ள படம் தெளிவு படுத்தும்.

இதற்கான தீர்வுதான் என்ன?

அதற்கும் இங்கு வழிசமைத்துத்தருகிறேன்.

## <u>இலங்கை அரசியல் பற்றிய தீர்வு</u>

கடந்த கால நடைமுறைகள் எமக்குக் கற்றுத்தந்த பாடம்: இலங்கையின் பிரச்சனை தீர்வுக்கு அற்ற கனவுகள். இலங்கையில், தமிழ் மக்களின் உயிர்ச் சேதத்தையோ வாழ்க்கைச் சிதைவினையோ எண்ணிப்பார்த்ததாக யாரும் இல்லை. அவரவர் தமது தேவைகளையும் இலாபத்தையும் காத்துக்கொள்வதோடு தமக்கு முக்காடும் போட்டுக்கொள்கின்றனர்.

இலங்கை அன்னையின் இரத்தக்கறையும் வேர்வைத்துளியும் துடைக்கவேண்டுமென்றால், ஒரேயொரு கட்டமைப்புக்குள் வந்தாலொழிய, தீர்க்கப்படப்போவதில்லை.

<u>அது, ஓர் அரசின் கீழ் இரு தனி அதிகாரங்கள்.</u>

<u>அதாவது, இலங்கை எப்போதும் தனது குடைக்கள்ளே இருந்து கொள்ள, இருதனி தனி அதிகாரங்கள், சிங்களத்துக்கெனவொன்றும் தனியதிகாரங்கள் தமிழுக்கென்றும் பகுக்கப்பட்டு, இருபாலரிடமும் இருந்து தெரிவுசெயயப்பட்ட அங்கத்தவரால் ஒரு குடையில் இலங்கை ஆட்சிசெய்யப்பட்டாலே ஒழிய, நிம்மதிப்பெருமூச்சு யாரும் விடமுடியாது என்பது உறுதி.</u>

**சிலவருட அனுபவ ஆட்சியின் பின்னரே <u>இரு தனி நாடுகளாக்கும்</u> நடவடிக்கைகள் பற்றி சிந்தனைகள் செலுத்தப் படவேண்டும்.**

இங்கு குறிப்பிடும் கட்டமைப்பானது சாலச் சிறந்தது.

இலங்கையின் அபிவிருத்தி, இலங்கையரின் நலம் என்பவற்றைக் கருத்திற் கொள்ளும் எவரும் எதிர்க்க முன்வரார். மாறாக இலாபக்காரார், சுயநலங்கருதுவோர், தற்பெருமை மற்றும் பதவி வெறிகொண்ட எவரும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பார் என்பதில் ஐயமில்லை. இக்கருத்துக்கள்

இன்று நேற்றல்ல என்னிடம் இருந்து உதித்தது, பல வருடங்களுக்கு முன் இது தொடர்பாக வெளியிட்ட போது அவற்றைப் பிரசுரிக்க எவரும் முன்வரலில்லை; (தற்போதுங்கூட) காரணம், கருத்துக்களை ஆழமாக அலசாமல் முடிவுகளை எடுப்போர் தற்போது ஊடகவியலாளர்களாக இருப்பதே. (ஒருசிலரை தவிர)

இத்திட்டத்தால் தமிழீழம் கொச்சைப்படுத்தப்படுவதாதக ஒருசிலர் பொய்ச்சாட்டுத் தேட முனைவர். ஆனால் ஒப்பீட்டளவில் தமிழர்களை விட சிங்களவர் அதிகமே. மேலும் இலங்கை எமது தாய்நாடு. இத்தனை காலமும் அவளின் அரவணைப்பிலேயே குளிர்காய்ந்திருக்கிறோம், என்ன! அவள் பெயரைச்சொல்லி ஆட்சியில் அமர்வோர் தமிழுக்குக்கொடுக்க வேண்டிய தக்க உரிமைகளைக் கொடுக்க வில்லை அவ்வளவுதான். அதனை தமிழ்க் கட்சிகள் நிவர்த்தி செய்திருக்கலாமே! இல்லாவிட்டால், அல்லது முடியாவிட்டால் முற்றுமுழுதாக தமிழ்க்கட்சிகள் அனைத்துத் தேர்தல்களையும் தெரிவின் பின் நிராகரித்திருக்கலாமே! தமது அதிதிருப்தியைத் தெரிவித்திருக்கலாமே! ஏன் அப்படிச் செய்யவில்லை?...

இத்திட்டத்தின்படி நோக்குவொமேயானால்... முடிவு தொலைவிலில்லை என்பது திண்ணம்.

இலங்கையில் ஆட்சிசெய்யும் கட்சியின் கொடியை, அரசின் கொடியாக மாற்றுவது போல் சட்டங்களை உருவாக்குவோமேயானால், நாட்டின் கொடியானது நாமுக்கு நாள், காலத்துக்குக் காலம் மாற்றப்பட்டுக்கொண்டேயிருக்குமல்லவா!?

அது போல, தமிழீழ விடுதலைப்புலிகளின் கொடியினை, தமிழீழத் தேசியக் கொடி என்று உறுதிப்படுத்துவது, பொருத்தமற்றது என்று எண்ணத் தோன்றுகிறது. அது உண்மையுங் கூட. தமிழீழத்திற்கென்று ஒரு கொடி அமைக்கப்படவேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு அரசியல் கட்சி, அவர்களால் அரசாங்கம் அமையுமாயின், அது **<u>சுதந்திர தமிழீழ ஜனநாயக சோசலீச குடியரசின்</u>** பிரதான பலம் பொருந்திய கட்சியாகக் காணப்படும்.

<u>உலகம் மன்னராட்சியில் இருந்து மக்களாட்சிக்கு மாற்றப்படும் போது, இங்குமட்டும் மாறாகவா இடம்பெறும்!?!</u>

இன்று நடந்து கொண்டிருக்கும் போர், விடுதலைக்காகவோ தன்மானத்திற்காகவோ நடைபெறுவது போல் இல்லாமல், வியாபாரத்திற்காக நடப்பது போல் காணப்படுகிறது. இவ்வாறான விமர்சனங்களுக்குக் கொடுக்கப்படும் பட்டம்: தேசத்துரோகி.

இல்லையென்றால், தமக்குத் தாமே புதிய பெயர்களை உருவாக்கி, எதிர்ப்பாளிகளாக தம்மைச் சார்ந்தவர்களையும் தூண்டி அந்நபரை மரணத்துக்குக் கூடத் தள்ளிவிடுவார்.

அரசியல் கட்டமைப்பானது உலகைப் பொறுத்தவரையில், இலங்கை ஒரு அரசு அதில் எந்த மாற்றமும் ஏற்படப்போவதில்லை. மாறாக இலங்கைக்குள் இரு தனி ஆழுமை கொண்ட முழுஅதிகாரங்கள் வழங்கப்பட்ட தனி அரசுகள் அமைந்திருக்குமாயின் உலகின் எந்தப்பகுதியும் இதுதொடர்பாகத் தலையிடபோவதில்லை காரணம் அது ஒருநாட்டின் உட்கட்டுமான மாற்றங்களாகும்.

தற்போது **ஒரு வரையறைக்குள் இலங்கையினைக் காட்டினால்:**

***<u>"இலங்கையானது, தாய் அரசின் கீழ் தன்னகத்தே, உள்ளிரு தனி அரசுகளைக் கொண்டுள்ள அங்கத்தவரால் தெரிவு செய்யப்பட்டு, மத்திய வங்கி, வெளிநாட்டு அமைச்சு போன்ற பிரதான காரியாலயங்கள் மற்றும் நிதிநிர்வாகம் சட்டம் என்பன ஒன்றாகவும், பல்லின மக்களையும் உள்ளடக்கிய ஒரு நாடு"</u>*** என்று அமையப்பெறவேண்டும்.

விரிவாகச் சொல்லப்போனால். அதாவது தற்போதுள்ள வார்த்தைகளைப் பயன்படுத்தி...

தமிழீழ மக்களால் (முஸ்லீம் உட்பட) தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசும் சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசும் அமைக்கப்பட வேண்டும் இங்கு யாருடைய தலையீடும் இடையூறாக அமையாத வகையில் இடம்பெற வேண்டும். பின்னர் இங்கு தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவரில் இருந்து நீதி, நிர்வாகம், நிதி தேசிய பாது காப்பு போன்றவற்றுக்காக சம அளவில்

தாய் அரசின் அதிகாரத்திற்காகத் தெரிவுசெய்யப்பட வேண்டும். இங்கு தெரிவு செய்யப்பட்டவர்களால் மட்டுமே இலங்கையின் பிரதான அதிகாரி (ஜனாதிபதி) அமைக்கப்படவேண்டும்.

இவ்வாறு வடிகட்டிய அரச நிர்வாகத்திற்கு மாறாக இலங்கை அரசியல் நிலை மாறப் போவதில்லை.

இந்த திட்ட நிலமையை யாரும் தனிப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தியோ பயமுறுத்தியோ அமைத்தல் கூடாது.

நிலமையை நன்கு ஆராய்ந்து மக்களுக்குத் தெளிவாக விளங்கும் வகையில் அறிவிக்கப்பட்டு அவர்களிம் இருந்து பொது வாக்கெடுப்பு மூலம் (றீ பண்டமண்ட் / rifandamend) அனுமதி பெற்றபின்னர் நிறை வேற்றப் பட வேண்டும்.

இலங்கையின் போராட்ட காலத்தையும் அதன் இழப்புக்களையும் கணக்கிட்டுப்பார்த்தால் தமிழீழப் போராட்டத்திற்காக இருபக்கத்திலும் இழப்பு அளவுக்கு மீறியதாகவே காணப்படுகிறது. பொருட்சேதங்களை வீட்டுவிடுவோம் உயிர்ச்சேதங்களைத் தொட்டுப்பாருங்கள் அதிலும் இழக்கப்பட்ட புத்தி ஜீவிகளை ஒப்பிட்டுப் பாருங்கள்...!

“சந்தர்ப்பங்களும் சாமர்த்தியங்களும் சாய்ந்து கொடுக்கும் போது, உண்மைக்கும் அறிவிற்கும் பலன் இல்லாமல் போகிறது.”

ஒரு சென்ரி மீற்றர் கோடு ஒன்றைப் போட்டு வீட்டு அதனைத் தீண்டாமல் அக்கோட்டினைப் பெரிதாக்கு என்று ஒருவர் சொல்ல இன்னொருவர் அரைசென்ரிமீற்றர் கோடு போட்டாராம். மற்றைய கோடு போடுமட்டும் முன்னைய கோடு சிறிதாகத்தான் இருந்தது இன்னொன்றோடு ஒப்பீடும் போதுதான் அதன் தன்மை புலப்படுகிறது. அது போலத்தான் உலகத்தில் ஏராளம் சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

ஆரம்ப காலத்தில் வெளிநாடுகளுக்குச் செல்வோர் தேசத்துரொகிகள் என்று கருதப்பட்டு கவிதைகள் பல வெளிவரக்கண்டேன் அவற்றிற்குப் பாராட்டும் கொடுத்துப் பட்டமும் கொடுத்தார்கள். ஆனால் அக்காலத்தில் இருந்தே எனது கவிதைகளில் வெளிநாட்டுக்குச் செல்பவர்களுக்கு வாழ்த்துச் சொல்லி அவர்கள் சந்ததிதான் ஈழத்திற்கு மிஞ்சப்போகிறது, வெளிநாடுகளில் இருந்தே எமது வரலாற்றைச் சித்தரியுங்கள் என்று பல்வேறு கவிதைகள் கட்டுரைகள் எழுதினேன் அப்போது அது மதிக்கப்படவில்லை.

இப்போது நிலமை எப்படிப்போகிறது...

வெளிநாடுகளில் இருந்து குவிகின்ற பணம் தான் போராட்டபின்னணிக்கான வியாபாரத்தைத் தோற்றுவித்துள்ளது.

பல்வேறு இயக்க அமைப்புக்கள் தோண்றுவதை அக்காலத்தில் இருந்தே பலம் பொருதந்திய இயக்க அமைப்புக்கள் எதிர்த்து வந்தன ஆனால் பல்வேறு தொடர்புச் சாதன இலாப அமைப்புக்கள் தோன்றிவருவதையும் அவை மக்களுக்கு வழங்கிவரும் தொடர்புச் செய்திகள் அதிக செலவில் அமைந்த போதிலும் அவற்றைக் கண்டிக்கவோ அல்லது ஒன்றிணைத்து நல்ல சேவையாகத் தொகுத்து வழங்கவோ ஏன் இவ்வமைப்பு முன்வரவில்லை.

எவ்வளவோ கஸ்டப்பட்டு அசாதாரணமாக ஒருவன் வெளிநாட்டுக்குள் புகந்து அவன் சிறையில் அன்னியன் கையில் அகப்பட்டுக் கிடக்கிறான். இதனைக் காரணமாக வைத்து அமைப்புக்களின் சார்பில் உள்ளவர்கள் அவர்களை வெளியில் எடுத்து விடுவதாகச் சொல்லி பேரம் பேசுகிறார்கள் அகப்பட்டுக் கிடப்பவர்களை பயஎமுறுத்தி அவர்களை புரியாத மொழக்குள் இருக்கும் காரணத்தால் திண்டாட வைக்கிறார்கள். சாதாரணமாக அந்நபரை வெளியில் வீட்டதும் இவர் வெளியில் வந்ததற்குத் தான்தான் காரணம் என்று சொல்லி 1000€ கறந்து விடுகிறார்கள் இது அமைப்பின் கணக்குள் போய்ச் சேருவதில்லை. அமைப்பும் இதனைக்கண்டு கொள்வதில்லை காரணம், அவரைப்போன்று செயற்படுவதற்கு இன்னொருவர் கிடைக்கவல்லவா வேண்டும்.

சரி, ஒரு முக்கிய விடையத்திற்கு வருவோம் தமிழீழம் கிடைத்து வீட்டது என்று வைத்துக் கொள்வோம். இல்லை தமிழீழத் தனிப் பிரகண்டணம் செய்யப்பாட்டதாகவைத்துக் கொள்வோம். உலகரீதியில் அதற்கு ஏற்படும் மாற்றங்களையும் உலகரீதியில் அவை அமைப்பதற்குள்ள

சட்டங்களையும் பார்க்கும் முன் ….

வீதாசாரத்தில் உலக ரீதியில்பார்க்கும் போது, இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு அதிகமாக வருங்காலங்களில் அமைந்தாலும் அது ஆச்சரியப்படுவதற்கில்லை என்ற அளவிற்குப் போகிறவேளையில், தமிழர்களுக்கான அதாவது ஈழத்தூதராலயம் என்ற ரீதியில் திழீழ விடுதலைப்புலிகள் ஏற்படுத்தப் போகவிருக்கும் அலுவலகங்களைப் பற்றி யாராவது சிந்தித்ததுண்டா? எமது தேவைகளுக்கு இலங்கை அரசிடம் நாடி நின்றது போல் இனி எங்கு போவது? கடவுச் சீட்டுக்கள், விசாக்கள், மற்றும் ஆவணங்கள்… இவற்றிற்கு நாம் கட்டவேண்டிய கொடுப்பனவுகள் இலங்கை அரசிற்குக் கொடுத்ததை விடக் குறைவாகவா கொடுக்கப் போகிறோம்?... இதற்கான தகுதிவாய்ந்த அதிகாரிகளை வேறுநாட்டவரிடம் இருந்தா கடன் கேட்கப்போகிறீர்கள்?...

*இலங்கை அரசிடம் இருந்து மீட்டு நம்மை நாமே கேவலப்படுத்தப் போகிறோமா அல்லது இலங்கை அரசு வழங்கிவந்த சேவைகளிலும் பார்க்க பன்மடங்கு புனரமைக்கப்பட்டு கிடைக்கப்போகிறதா? இதையும் பொறுத்திருந்து பார்ப்பொம் என்று நையாண்டிச் சாட்டுச் சொல்லும் மக்கள்மத்தியில் எதைச் சொன்னாலும் எடுபடப் போவதில்லை.*

வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் மக்கள் கொஞ்சநெஞ்ச கஷ்டங்களாபட்டுக் கொண்டிருக்கிறார்கள்? இவற்றை யெல்லாம் யார் தீர்ப்பது? தமிழர்களுக்காகவும் தமிழீழத்திற்காகவும் போராட்டத்தில் முன்னணியில் நின்று இப்போராட்டத்திற்கு மக்களின் பங்களிப்பைக் கொட்டு கொள்ளும் ஒவ்வொரு நாட்டில் இருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முகவர்கள் தாம் கேட்கவேண்டும். இலங்கையில் இருக்கும் தமிழர்களுக்கு ஒரு நீதி உலக ரீதியில் இருக்கும் தமிழர்களுக்கு ஒரு நீதியா?

ஒரு முறை இத்தாலியில் இருக்கும் ஒரு சேவை அமைப்புடன், தமிழீழத்திற்காகப் போராடும் இமைப்புச் சார்ந்த முக்கிய பிரமுகர் சிலரும் ஒன்று கூடலில் இருந்த போது தமிழர்களுக்கொன தமிழர்களிடம் இருந்து பணம் திரட்டுவது தொடர்பாக பேசப்பட்டபோது அந்த இடத்தில் எழுந்த சம்பவத்தைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

"தமிழீழத்தில் இருக்கும் கஸ்டப்பட்ட மக்களுக்கானக நீங்கள் இவ்வளவு அக்கறையுடன் செயற்படுவது பாராட்டக் கூடியது எனினும் இங்கிருக்கும் ஒருசிலர் (இத்தாலியில்) அவர்களைப் போல் சிரமப்படுகின்றனர் அவர்களுக்கு …" என்று இத்தாலியில் உள்ள சேவை அமைப்புக் கோட்டபேகாது,

" அது அவர்களின் தலை யெழுத்து அவரவர் தேடிக் கொண்டது, நாங்கள் அங்கிருப்பவர்களைத்தான் பார்ப்போம்" என்று பிரமுகர் சார்பில் வந்தவர் அருவெறுப்புடன் பதில் சொன்னார்.

"இங்கிருப்பவர்கள் நல்லா இருந்தால் தானே அவர்கள் மூலமாய் மற்றவர்களுக்கு உதவமுடியும்" என்று மீண்டும் கேட்டபோது…

"அது எங்கட வேலையில்லை என்று சம்மந்தமில்லாத எதைபோ பேசத்தொடங்கினார் அவர்.

இவர்களை எப்படி நம்பி தமிழீழத்தை ஒப்படைப்பது?.
இவர்களை எப்படி நம்பி ஆவணங்களை ஒப்படைப்பது?
இவர்களை எப்படி நம்பி அதிகாரங்களை ஒப்படைப்பது?
இவர்களை எப்படி நம்பி அலுவலகங்களை ஒப்படைப்பது?...

இவர்களா வருங்காலத்தில் தூதராலயங்களில் அமரப்போகின்றனர்?
இவர்களா ஆவணங்களில் ஒப்பமிடப் பொகின்றனர்?
இவர்களை நம்பிய 25 வருடப் போராட்டம் இடம் பெற்றது?
இவர்களை நம்பியா எமது உறவுகளைப் பறிகொடுத்தோம்?

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கென்று தனி கௌரவம் கொடுக்கப்படும் பொது இவ்வாறானவர்களினால் அந்த கௌரவத்தில் கறை விழுந்து விடாது?

இத்தாலியில் உள்ள ஒரு சில கேவலமான எம்மவரின் வாழ்க்கை முறையினை முறையிட விரும்புகிறேன். காரணம் இவை சீர் செய்யப்படவேண்டும் என்பதற்காக…

மீண்டும் "அடிதடி 3"ல் தொரும் வரை...

## "அடிதடி 3"

இத்தாலியில் உள்ள ஒரு சில எம்மவரின் கேவலமான வாழ்க்கை முறையினை முறையிட விரும்புகிறேன். காரணம் இவை சீர் செய்யப்படவேண்டும் என்பதற்காக...

ஒரு பெண், அவள் ஒரு பையனை விரும்புகிறான் என்று பெற்றோர் அவசரம் அவசரமாக இலங்கைக்குக் கூட்டிக்கொண்டு போய் வேறு ஒரு பையனை திடீரென மணம் முடித்துவைத்தனர். அந்தப்பெண்ணும் எமது பாரம்பரியம், பண்பாடு, பழக்கவழக்கம் என்பவற்றை மதிப்பவள் போல் தன்னால் முடிந்தவரை அடித்துப் பிடித்து கணவனை தன்னுடன் அழைத்துவிட்டாள். நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பது போல் அவர்கள் காணப்பட்டார்கள். மகிழ்ச்சி இப்படித்தான் இருக்கவேண்டும் என்று எண்ணத்தோன்றியது! கணவன் வந்ததும் அவனுக்கு வேண்டிய அனைத்தையும் ஆவலுடன் செய்தாள் அவள்.

நிமிடங்கள் நகர்ந்து, நாட்களாயின நாட்கள் கடந்து மாதங்கள் ஆயின...
நான் வேலை செய்யும் இலுவலகத்தில் இருந்து வைத்திய சாலைக்கு அவசரமாக என்னை மொழிபெயர்ப்பிற்காக அழைப்பு வந்தது. அங்கு சென்றேன், என்கண்களை என்னால் நம்ப முடியவில்லை, நான் குறிப்பிடும் அந்தப்பெண் காயங்கள் தெரிய நின்றிருந்தாள் அவளை நடந்த சம்பவத்தை தெளிவு படுத்தக் கேட்டேன் அப்போது அவள்ஹ எல்லாவற்றையும் சொல்ல மறுத்ததும் எனக்குப் புரிந்தது.

அங்கிருந்து சென்றதும் மீண்டும் ஒருமுறை சந்திக்க நேர்ந்தது, அப்போது அவள் தனது கணவனைப் பிரியும் அளவிற்கு வந்து விட்டாளள் என்று சொன்னாள். என்னால் அதனை ஜீரணிக்க முடியவில்லை. இதற்கிடையில் அவள் கர்ப்பமாக இருந்தாள் என்பது குறிப்பிடத் தக்கது. அந்தப் பெண்ணை அவள் கணவன் அடித்துத் துன்பப்படுத்துவதாகவும் கர்ப்பிணீஎன்று பார்க்காமல் அவளைச் சித்திரவதை செய்வதாகவும் அவள் தெரியப்படுத்ததினாள். காலம் சென்றது குழந்தையும் பிறந்தது...

ஆனாலும் அவர்கள் சச்சரவுகள் தீரவில்லை, அவன் அவளை வீட்டு வெளியேறிநான் அவள் பிஞ்சுப்பாலனுடன் தனிமையாக்கப்பட்டாள். நல்லவேளை அவள் வேலைசெய்தபடியால் அரசிடம் இருந்து வரவேண்டிய உதவித்தொகை மாதாமாதம் வந்து கொண்டிருந்தது. தனது காலத்தை அவள் அவனைப் பிரிந்தும் ஒருவாறாக ஓட்டிக்கொண்டிருக்கிறாள்.

இதே வேளையில் அந்தப் பையன் என்னவானான்?

அவனுக்குத் தெரியாத பூங்காக்களேயில்லை, அவனுக்குத்தெரியாத மதுபானங்களேயில்லை, அவனுக்குத் தெரியாத அளவுக்கு மீறிய குடிகாரநன்பர்களேயில்லை.

இந்தக் குடும்பத்தின் உண்மைநிலை எமக்குத்தெரியாவிட்டாலும், எமது கலாசாரம் பாரம்பரியம் சீரழிகின்றது என்பதே உண்மை. இவற்றை யார்தான் தீர்த்து வைப்பது? அவளுக்கு ஏற்படும் கஷ்டகாலத்தில் எந்த அமைப்பு கைகொடுக்கப் போகிறது.

தனிமையாய் இருக்கும் பெண்கள் மத்தியில் ஆண்கள் **ஒருசிலரின்** பார்வையே வேறு என்பதனை ஏற்கனவே "அர்ச்சனை இதழ்கள்" என்னும் நூலில் எழுதியுள்ளேன்.

இன்னொரு குடும்பம், திருமனவயதில் பிள்ளைகள் இருக்கும் போது, மனைவி தனது பிடிவாதம் காரணமாகவோ அல்லது வேறு ஏதோ காரணத்தாலே விலகும் சந்தர்ப்பத்தில் மறு மணம் செய்து விட்டு தலைநிமிர்ந்து நடக்கின்றார். இதில் எத்தனை பேருடைய இதயங்கள் தாக்கப்டுகின்றன... எனக்கென்ன அது அவனுடைய பிரச்சனை என்று ஒதுக்க முடியாதே! ஏனென்றால் அச்சம்பவம் எமது பண்பாட்டுக்குட்பட்ட நபர்களாலேயல்லவா மேற்கொள்ளப்படுகிறது...

இவ்வாறான மன ஒற்றுமையற்ற சந்தர்ப்பத்திலும் சேர்ந்து வாளச்சொல்லிமுட்டாள்தனமாகச்

சொல்லவில்லை. அதற்கு செய்யவேண்டிய முறைகளைச் செய்து விட்டு பின்னர் தனது முடிவை எடுக்கலாம்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் மறுமணம் முடித்த பெண்ணைப் பற்றி சற்று திரும்பிப்பார்த்தால், இந்தப்பெண்ணைச் சட்டப்படி வெளிநாட்டுக்குக் இலகுவில் கொண்டுவரமுடியாது, அப்படிக் கொண்டு வந்தாலும் பல்வேறு சட்ட பிரச்சனைக்குள் அவள் சிக்குப்பட வேண்டியிருக்கும். இவ்வேளையில் அவளுடைய மனம் படும் பாட்டிற்கு யார் விடுதலைதருவார்கள்?

மனம் ஒத்துப்போகாத சந்தர்ப்பத்தில் விலகுவதே இருபாலருக்கும் நல்லது ஆனால் விலகுமுன் அதற்கு வேண்டிய அனைத்து முறைகளையும் புலம் பெயர்ந்து வாழ்பவர்கள் மேற்கொண்ட பின்னரே அடுத்த நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கெல்லாம் உங்களிடம் இருந்து பலனைப் பெற்ற எந்த அமை தீர்வை கொண்டுவரப்போவதில்லை.

எனவே, தமிழீழம் கிடைப்பதற்கு முன்னரே, மக்கள் மத்தியில் ஒரு மதிக்கப்படக்கூடிய அலுவலகத்தை, மக்களின் சமுகப்பிரச்சனைக்காக நீதிதரக்கூடிய அதிகாரிகள் உள்ளடங்கிய மேலும் இப்போதிருந்தே எதிர்காலத்தில் ஆவணங்களை மேற்கொள்ளக்கூடிய நிர்வாகிகளை புலம் பெயர் தேசங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்படுத்தி யாகவேண்டும். இது தற்போது நடைமுறையில் இருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் காரியாலயங்களுக்கு அப்பாற்பட்டு தொடர்பற்ற ரீதியில் “ஈழஅரசு” என்ற ரீதியில் அமைக்கப்பட வேண்டும்.

*(இது தொடர்பாக இத்தாலியில் சட்டத்திற்கிணங்க தேவை யேற்படின் உதவுவதற்கு மக்கள் அமைப்பான “unga2007@libero.it உடன் தொடர்பு கொள்ளலாம்)*

## EELAPPORATDAMUM ILANGKAYIN PATHATDAMUM
## ஈழப்போராட்டமும் இலங்கையின் பதட்டமும்

இலங்கையின் வரலாறு நடைபெற்ற சம்பவங்கள் அனைத்துக்கும் ஏராளம் சான்றுகள் ஏலவே கிடக்கின்றன, இப்போது என்னநடந்து கொண்டு இருக்கிறது என்பது வரலாற்றில் மாற்றப்படாமல் இருப்பதற்கு நாம் முயலவேண்டும் இதற்கான படிகளில் இதுவும் ஒன்று.

கிட்டத்தட்ட ஆறு தசாப்தமாக, (1948ல் இருந்து) அண்ணளவாக ஒரு தலைமுறையாக, இலங்கை அரசிடம் இருந்து அந்நாட்டு மக்களில் “சட்டத்துக்கு உட்பட்ட” சமத்துவம் வழங்கப்படாமைக்கான காரணக்குரலாக ஒலித்ததன் விம்பம் இன்று உலகத்துக்கு அம்மக்களின் வதனத்தையே காட்டியுள்ளது.

இதன் பிரதிபலிப்பு தமிழீழ விடுதலைப் புலிகள் என்னும் அமைப்பு உலகத்தமிழர்களின் பிரதிநிதிகளாக இலங்கை அரசுடன் தமிழர்களுக்கான சமவுரிமை கோரி ஆயுதம் ஏந்த நேரிட்டுள்ளது. இதற்குத் தக்கபதிலோ அல்லது வழங்கப்படாத உரிமைகளைக் கொடுக்கவோ மறுக்கும் சிங்கள ஆதிக்கத்துக்குள் பிடிபட்டிருக்கும் அரசானது இவ்வமைப்பை தீவிரவாதக்கும்பல் என்று உலகிற்கு அறிமுகஞ்செய்ய எத்தணித்தது, அதுவே தமிழர்கள் பக்கமான பார்வையினை உலகினைத் திருப்பிய பெரிய விளம்பரமாகும்.

கிட்டத்தட்ட ஒருமுழுத்தலைமுறையினையே ஆட்கொண்டுவிட்டது இப்போராட்டம். அடுத்த தலைமுறைக்கும் இப்போராட்ட நோய் தொடருமாயின், இன்னும் ஏராளம் தமிழர்களின் உயிரைக்குடித்து உலகத்தமிழர் தொகையில் பாரிய வீழ்ச்சியினை ஏற்படுத்திவிடும் என்பதில் ஐயமில்லை அத்தோடு தமிழீழ மெக்கள் சனத்தொகையில் தற்போது சாதாரணமாகவே வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது அதாவது முன்புபோல அதிகமான குழந்தைகள் பெரும் கட்டங்கள் குறைந்து போய்விட்டது இரு பிள்ளைகளுக்குமேல் றெம் காலகட்டம் மாற்றமடைந்துள்ளது அதற்கு குடும்பச்சூழல், பொருளாதாரம், வயதுமுதிர்ந்த திருமணம் போன்ற பலகாரணிகள் காரணமாகிறது.

தமிழீழ எல்லையின் அளவோடு ஒப்பிடும் போது இப்போராட்டகால நீடிப்பும், இழக்கப்பட்ட மக்கள் தொகையும், சேதமான பொருட்களும், ஈடுசெய்ய முடியாத மனஉழைச்சலும் பன்மடங்கு அதிகம் என்றே சொல்லவேண்டும். இந்த வேளையில் இப்போராட்டத்திற்காக அதாவது தமிழீழக்கொள்கைக்கென ஆரம்ப காலத்தில் இருந்து பல்வேறு அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் என்று தமது உயிரினை அர்ப்பணித்தது மட்டுமல்லாமல் தமது தனிப்பட்ட ஆசைகள், எதிர்பார்ப்புக்கள், எதிர்காலங்கள் என்பவற்றை மண்ணுக்குள் புதைத்த ஈழமாதாவின் புதல்வர்களை

கண்ணீரோடு நினைவுகூருகிறேன்.

எல்லா வழமும் நிறைந்த எமது நிறைந்த ஈழத்தில் போர்மட்டுமே நிரந்தரம் போல் கடந்த முப்பது வருடமாக மேகம் சூழ்ந்து காணப்படுகிறது.

இன்றைய பொழுதில் தமிழர்கள் எல்லாரும் சரி, தமிழ்மற்றும் தமிழ் சார்ந்த அமைப்புக்களுஞ்சரி புதியதொரு வரலாற்றுக்கட்டத்தில் அமுக்கப்பட்டுள்ளோம் என்பதனை வாழ்க்கையின் பாதை காட்டிச்செல்கிறது.

1917ம் ஆணஇடுகளில் சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் சிங்களவருடன் சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிராக அரசியல் சீர்திருத்தத்தை மேற்கொண்டார். அதன் பிரதிபலிப்பு இன்றைய இலங்கைச் சட்டவமைப்பு என்று சொன்னால் அது மிகையில்லை. ஆணால் தமிழர்களின் துர்ரதிஷ்டம் இலங்கை சிங்களவரின் பிடிக்குள்ளும் ஆரம்பத்தமிழர்கள் பதவிகளின் மற்றும் பட்டங்களின் பிடிக்குள்ளும் மட்டும் சிக்குண்டமை.

அப்போதே தமிழர்களுக்கும் சிங்களவருக்கும் என்ற பிரிவு காட்டப்பட்டிருந்தால் இந்தியா பாக்கிஸ்தான் பங்களாதேஸ் போன்ற நாடுகளைப்போல் காணப்பட்டிருக்கும். மாறாக முன்னுள்ளவரின் எண்ணம் ஆங்கிலேயரிடம் இருந்து இலங்கையை மீட்டெடுப்பதில் இருந்தமையால் சிறுபான்மையாக இருந்த மக்களின் உரிமைகளை பிற்காலத்தில் சிங்களவர்கள் மறுத்து ஒதுக்குவார்கள் என்று நினைக்கவில்லை. எனினும் ஆரம்பச்சட்டம் தமிழ் அரசியல்கட்சிகூட அரசாங்கத்தை அமைக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் இருந்ததையிட்டுச் சாதுர்யமாகச் சட்டத்தை மாற்றியமைக்கும் போதுகூட தமிழர்கள் அமைதிகாட்டியதன் காரணமே இன்றைய இச் சூழ்நிலை.

ஏற்கனவே கரும்புலிகளின் இரும்பொலிகள் என்ற ஆக்கத்தினுடன் பகிர்ந்து கொண்டதை நினைவுபடுத்த விரும்புகிறேன் "மொழி ரீதியிலும், இனரீதியிலும் சிங்களவர் காட்டிய வேற்றுமைகள் இன்றைய கரும்புலிகளைத் தோற்றுவிக்கச் செய்தது. மூன்று பெரும் பிரிவுகளாக ஆரம்பகாலத்தில் இருந்த இலங்கையின் ஆளும் அரசுரிமை பெரும் பகுதி தமிழருக்கே உரியதும், தமிழர்களே ஆண்டு வந்ததும் மறைக்கப்பட்ட உண்மைகள்

பிரித்தானியரின் மீமுகையின் போதாவது இரு அரசுகளாக்கப்பட்டிருந்தால் அது வரவேற்கக் கூடியதாக இருந்திருக்கும். அப்பேற்பட்ட பாதிப்பை ஏற்படுத்திய பிரித்தானியா இப்போது கூட இதில் சிரத்தை காட்டாமல் இருப்பது சினத்திற்குரியதே.

ஆதிக்க வல்லரசின் அதிருப்தியான முடிவு இன்று ஏராளம் எம்முயிரினை இழந்து வேதனைப்படும் சொந்தங்களைப் பார்க்கப் பொறுக்காமல் பலியாகும் மக்கள் புலி வீரராயும், புலிவீரர் புடம் போடப்பட்டுத் தரையில் கரும்புலி வீரரெனவும் கடலில் கடற் கரும்புலி வீரர் என்றும் பலம் பெற்றுத் தனக்கெனத் தாபிக்கத் துடிக்கும், தாய் மண்ணை மீட்கத் துடிக்கும், தாகத்தவர்களானதுதான் நடைமுறையில் கண்டுவிட்ட நிஜங்கள்.

வரலாறு கடந்து விட்டபோதிலும், கடந்த காலங்களைப்பார்த்தால் அங்கும் தமிழர்களுக்கிருக்கும் சாதகத்தினை தட்டிப்பறித்துக் கொண்டே இருந்தனர் சிங்களவர்.

1978ற்கு முன்னர் இருந்த தேர்தல் முறையினால் தமக்கு பாதிப்பு ஏற்படும் எனத் திட்டமறப்புரிந்து கொண்ட பெரும் பாண்மை சிங்களவர் அங்கும் தமக்குச் சாதகமான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தினர்.

அதாவது, 1977 பொதுத் தேர்தலின் போது சிறீலங்கா சுதந்திரக் கட்சி.8 வேட்பாளர்களைப் பெற்றிருந்தது மொத்த வாக்குகளில் 29.7வீதத்தையும்,ஐக்கிய தேசியக்கட்சி 140 வேட்பாளர்களைப் பெற்றபோது,50.9வாக்குகளும் பெற்றிருந்தது. இதில் முக்கிய விடையம் என்னவென்றால் 6.4வீதமான வாக்குகளைப் பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு 18 வேட்பாளர்களைக் கொண்ட காரணத்தால் எதிர்க் கட்சியாகுந் தகுதி கிடைக்கப் பெற்றது. இந்த நிலையினைக் கண்டு திடம் இழந்த சிங்களவர் அவசர அவசரமாக வீதாசார முறையைக்கையாளச் சட்டத்தை அமுல்ப்படுத்தி தமிழர்களுக்கு இருக்கும் சாதகமான சட்டத்தையே சாய்த்துவிட்டனர் இனி எந்தக் காரணத்தை வைத்துக் கொண்டும் தமிழர்கள் தலைநிமிர மாட்டார்கள் என்று இருந்தபோதுதான் தமிழர்களின் தனிப் பெரும் பிரதிநிதி தமிழீழ விடுதலைப் புலிகள் என்பதனை கரும்புலிகள் மூலம் உலகறியச் செய்தனர் தமிழர்."

இப்போது இருக்கும் தமிழ் அரசியல்க் கட்சிகளும் த.ஈ.வி.பு இலங்கை அரசின் அரசியல்லாட்டத்தை தற்போதைய அரசாங்கத்துடன் இணைந்து செய்யாவிடின் இலங்கையின் நிலை

அதோகதிதான்! மட்டுமல்லாமல், தமிழர்களின் சுதந்திரம் தமிழர்களாலே நசுக்கப்பட்டுத் திண்டாடும் என்பதும் நிஜம்.

தமிழ்க் கட்சிகளுக்கு ஒரு முக்கிய ஆலோசனை ஒன்றை சொல்லமுனைகின்றேன், இன்று புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் தொகையினை சற்றுக் கவனிக்கவேண்டும். இது அரசிற்கும், இலங்கை அரசியல் கட்சிகளுக்கும்தான். அதாவது, ஒவ்வொரு முறை நடைபெறும் வாக்கெடுப்புக்களில் புலம் பெயர்ந்தவர்களை கைவிடுவதால் ஏராளம் வாக்குககளை இழந்து விடுகிறார்கள். இதனால் இங்குள்ள தமிழர்களை இலங்கை அரசும், தமிழீழ விடுதலை புலிகளும், தமிழ் அரசியல் கட்சிகளும், தமிழ் எம்பிக்களும், தமிழ் மந்திரிகளும் கைவிட்டுவிடுகின்றனர். மாறாக இங்குள்ளவர்களுக்கும் எப்போது வாக்கெடுப்பு நடைபெறுகிறதோ அப்போது இங்குள்ளவர்களுக்கும் பூரண உரிமைகள் கிடைக்க வாய்ப்புண்டு.

"தமிழீழம்" என்றொரு சுயநிர்ணயப்பிரகண்டணம் செய்யப்படுமாயின், ஆகக்குறைந்த 10 வருடங்கள் தேவை தமிழீழத்தை அரசியல், பொருளாதார, நிதி, அபிவிருத்திக் கட்டமைப்புக்குள் கொண்ண்டுவர என்பது சாதாரண மக்களால் உணரமுடியாததொன்று. இல்லை இப்போது தமிழீழ விடுதலைப் புலிகள் அனைத்திலும் திறம்பட இருக்கிறார்கள், அவர்கள் இப்போதிருந்தே தனிஆட்சிதான் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று மக்கள் தவிர தமிழீழ விடுதலைப் புலிகளும் சொல்லுவார்க ளேயானால் அது அவர்களுடைய அரசியல் சதுரங்கத்தைக் குறைத்து விடும்.

இன்று தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் எந்த அரசியல் அதிகாரிகளுக்கும் ஊதியம் வழங்கவில்லை, எந்த ஆவணங்களும் உலக ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இல்லை, தமிழீழ விடுதலைப் புலிகளின் எந்த உறுப்பினரும் தமிழீழ கடவுச் சீட்டுடன் உலகத்தை வலம் வருவதில்லை, எந்த அரசியல் அதிகாரிகளுக்குமாக ஓய்வூதியப் பணம் ஒதுக்கவில்லை, தம்மைச் சூழவுள்ளவர்களுக்கும் தமக்கும் பாதுகாப்பைத் தெடியுள்ளார்களே யொழிய வேறில்லை இதுவல்ல அரசாங்கம்!.

அரசிற்கு நிதி மட்டும் போதாது ஆட்சிநடாத்துவதற்கு உலக அங்கிகாரம் அவசியம்.

முதலில் தமிழீழ விடுதலைப் புலிகளை உலக அரசுகள் அங்கிகரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதன் மூலம் தமிழீழத்தை, இலங்கை அரசு போல் அங்கிகரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இதற்கு...

எமது தமிழ் அமைப்புக்கள் முட்டைக்குள் கோட்டைகட்டிப்பழகியவர்கள். இன்று ஒரு குடும்ப வாழ்க்கையே நாடு வீட்டு உலகு என்று மாறும் போது நம்மவர்கள் மட்டும் கிணற்றுத்தவளைபோல் திட்டமிட்டால் தகாது. எம்மைச் சுற்றியே போராட்டம், எம்மைச்சுற்றியே விமர்சனமும் விளக்மும், எம்மைச்சுற்றியே சர்ச்சைகளும் எதிர்ப்புக்களும். என்ன திட்டம் இது?

முட்டையை உடைத்துக்கொண்டு காலத்திற்கு ஏற்ப பறக்க வேண்டாமா?

இன்னும் தொடரும் அடிதடி.